2021 ஆகஸ்ட் 31]

பயன்படுத்தப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த முறை, பட்ஜெட் தாக்கல் செய்யும்போதே "ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதி அப்படி இருக்குமானால், நிச்சயமாக இந்தத் திட்டத்தைத் துவக்குவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

பொறியியல் கல்லூரி

***686—திரு. மா. செந்தில்குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி தொகுதியில் 5 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 3 சுயநிதி Polytechnic *கல்லூரிகளும், 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 22 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள்,*

அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், கள்ளக்குறிச்சி தொகுதியில் புதிதாக ஒரு பொறியியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த கள்ளக்குறிச்சி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும். . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள், பள்ளிக் கல்வித் துறையில் அதிகமான திட்டங்களை, சலுகைகளைத் தந்ததன் வாயிலாக கிராமப்புறங்களிலுள்ள அனைத்து மாணவ, மாணவிகளும் இன்று சிறந்த முறையில் கல்வி கற்று, கல்லூரிப் படிப்பு படிக்கச் செல்கிறார்கள். எங்கள் தொகுதியில் மாணவ, மாணவிகளின் நலன் கருதி, கள்ளக்குறிச்சியில் அரசு பொறியியல் கல்லூரி அவசியமாக அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப்போல அங்கே சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் 5 இயங்குகின்றன. குறிப்பாக பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அவற்றிற்குக் கட்டடம் மற்றும் விடுதிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குகின்ற வகையில் ரூ.96 கோடி வரை செலவாகும். அதுமட்டுமல்ல, ஆண்டொன்றுக்கு ஊதியம் வழங்க 17.18 கோடி*

2021 ஆகஸ்ட் 31]

ரூபாய் செலவாகும். தமிழ்நாட்டிலேயே மொத்தம் 10 அரசு பொறியியல் கல்லூரிகள்தான் உள்ளன. சுயநிதி பொறியியல் கல்லூரிகள் 554 இருக்கின்றன. அதுமட்டுமல்ல, கள்ளக்குறிச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள ஐந்து பொறியியல் கல்லூரிகளில் மொத்த மாணவர்களின் சேர்க்கை இடங்கள் 1,380. ஆனால், 2020–2021 ஆம் ஆண்டில் எத்தனை பேர் சேர்ந்திருக்கிறார்கள் என்றால் 462 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். ஆக, காலியிடங்களே 918 இருக்கின்றன. எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியும், பொறியியல் கல்லூரிகளில் தற்போது மாணவர் சேர்க்கை எண்ணிக்கை குறைந்து கொண்டிருக்கின்றது. அறிவியல் கல்லூரிகள், அரசு கலைக் கல்லூரிகளில்தான் மாணவர்கள் சேர்க்கை தற்போது அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. அதனால்தான் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நான் சார்ந்திருக்கின்ற, திருக்கோவிலூர் தொகுதியில் இந்த அரசு கலைக் கல்லூரியினை அறிவித்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதனை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். எனவே, சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டம் மலைப் பகுதியில் அமைந்துள்ளது. சங்கராபுரம், ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் உள்ளிட்ட ஐந்து தொகுதிகளை உள்ளடக்கியிருக்கிறது. அங்கு கிராமப்புற மாணவர்கள் உண்மையிலேயே வசதியற்று இருக்கிறார்கள். நீங்கள் சொல்லும் கல்லூரிகள் தனியார் கல்லூரிகளாக உள்ளன. அதேநேரத்தில் கள்ளக்குறிச்சியினை மையப் பகுதியாகக் கொண்டுள்ள அந்தத் தொகுதிக்கு அரசுக் கல்லூரி அவசியம் தேவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்துகிறேன். நீங்கள் சொல்கிறீர்கள்-திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள ஓர் அரசுக் கல்லூரியில் 1400 மாணவர்கள் சேர்கிறார்கள்; அதில் சேருகின்ற மாணவர்களைத் தவிர இன்னும் இருக்கின்ற மற்ற மாணவர்கள் அந்தப் பகுதிக்கு பொறியியல் கல்லூரி அவசியம் தேவை என்று கருதுகிறார்கள். அங்கு என்ன சூழ்நிலை இருக்கின்றது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். நமது பகுதி*

மிகவும் பின்தங்கிய பகுதி. உண்மையாகவே பொறியியல் கல்லூரி அவசியம் தேவைப்படுகின்ற ஓர் இடம்; முன்னாள் முதலமைச்சர் அண்ணன் அவர்கள் புதிய மாவட்டமாக அறிவித்து, ஒரே வருடத்தில் மாவட்ட மருத்துவக் கல்லூரி, மாவட்ட மருத்துவமனை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உட்பட அனைத்திற்கும் ஒரே ஆண்டில் அடிக்கல் நாட்டி, நிதி ஒதுக்கி, தற்போது கட்டடங்கள் முடியும் தருவாயில் உள்ளன. அதுபோல் அந்தப் பகுதிக்கு பொறியியல் கல்லூரி அவசியம் தேவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் நிதி பற்றி குறிப்பிடுகிறீர்கள்; அது அந்தப் பகுதிக்குத் தேவை, அது உங்களுக்கும் தேவை என்றுதான் நான் கருதுகிறேன். கள்ளக்குறிச்சியை தலைநகராகக் கொண்ட ஐந்து தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் இருக்கின்ற ஏழையெளிய மாணவர்கள், வெள்ளிமலையிலிருந்து படிக்க வருகின்ற மாணவர்கள் எங்கு செல்வார்கள்? கள்ளக்குறிச்சி தொகுதியைச் சுற்றியுள்ள மாணவர்கள் அனைவரும் பின்தங்கியவர்கள்தான். அங்கு யாரும் பெரிய அளவிற்கு வசதியானவர்கள் இல்லை. எடப்பாடியார் அண்ணன் அவர்கள் மாவட்டத்தினைப் பிரித்துக் கொடுத்ததினால் மாவட்டம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. வளர்ச்சியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. எனவே, இந்நேரத்தில் அங்கு பொறியியல் கல்லூரி அவசியம் தேவைப்படுகின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்குள்ள அனைத்து உறுப்பினர்களுமே தங்களது தொகுதிகளுக்கு பொறியியல் கல்லூரிகள் வேண்டும்; அரசு கலைக் கல்லூரிகள் வேண்டும்; பாலிடெக்னிக் கல்லூரிகள் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை மறுப்பதற்கு ஒன்றுமில்லை. தமிழ்நாட்டில் அரசு பொறியியல் கல்லூரிகள் மொத்தமே பத்துதான் இருக்கின்றன. அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் மூன்றுதான் உள்ளன. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 5 சுயநிதி பொறியியல் கல்லூரிகள் உள்ளன. அதிலேயே மாணவர்கள் சேராமல் காலியிடங்கள் உள்ளன. அந்தக் காலியிடங்களை அவர்கள் நிரப்பினாலே போதும். படிப்பதற்கான வசதிகள் அதிலே செய்து கொடுப்பதற்கான*

2021 ஆகஸ்ட் 31]

வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, அரசு பொறியியல் கல்லூரி என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகின்றது. அரசு பொறியியல் கல்லூரி கொண்டுவர வேண்டும் என்று சொன்னால், அதற்குத் தேவைப்படும் நிதிநிலை பற்றியும் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நிதிநிலை கடந்த காலங்களில் எப்படி இருந்தது என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆகவே, இப்பொழுது கள்ளக்குறிச்சியில் அரசு பொறியியல் கல்லூரி துவங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தனபால் அவர்கள்.*

திரு. ப. தனபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியான அவினாசி தொகுதி, அன்னூரில் ஒரு பொறியியல் கல்லூரியினை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சபாநாயகராக இருந்தவர். இன்றைய அரசினுடைய நிதி நெருக்கடியைப் பற்றியும் அவர்களுக்குத் தெரியும். கல்வித் துறையின் வளர்ச்சியில் அவர் காட்டியிருக்கிற அக்கறையை நான் உண்மையிலேயே மதிக்கிறேன். ஆனால், பொறியியல் கல்லூரிகள் அதிகம் துவக்குவதற்கான சூழ்நிலைகள் இப்போது இல்லை. ஏனென்றால் மாணவர்கள் சேர்க்கையும் குறைவாக இருக்கிறது. அவர்கள் பொறியியல் கல்லூரியில் படித்து முடித்தவுடனே, வேலைவாய்ப்புகளைத் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவேதான் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறியியல் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும்; அரசு கலைக் கல்லூரியில் படிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும் என்ற*

அடிப்படையில் பாடத் திட்டங்களைக்கூட மாற்றி அமைக்க அறிவுறுத்தியிருக்கிறார்கள். வருகின்ற காலங்களில் அந்த வளர்ச்சிக்கு ஏற்ப, அதற்கான முடிவினை அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, என்னுடைய ஆலங்குளம் தொகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரிக்காக அனுமதியைக் கொடுத்தது. நேற்றையதினம் நானும்கூட அங்கே சென்று, இடத்தைத் தேர்வு செய்து கொடுத்திருக்கின்றேன். மாவட்ட ஆட்சியரும் அதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கின்றார். ஆகவே, அங்கே அந்தக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் போதிய கட்டட வசதியின்றி சிரமப்படுகிறார்கள், வாடகைக் கட்டடத்தில் இருக்கின்ற காரணத்தினால் இந்த ஆண்டு அந்தப் பணிகள் துவங்கப்பட்டு, அந்தக் கல்லூரி மாணவர்களுக்கு நன்மை செய்யப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் 13 கலைக் கல்லூரிகள் அறிவிக்கப்பட்டன. ஆனால், மொத்தம் 4 கல்லூரிகளுக்குத்தான் இடம் வாங்கி ஒதுக்கியிருக்கிறார்கள். மீதமுள்ளவைகளுக்கெல்லாம் இடமும் கிடையாது. வாடகைக் கட்டடங்களில்தான் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நிதியும் சரியாக ஒதுக்கப்படவில்லை. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இந்த அரசு இந்த ஆண்டு அந்த 13 கல்லூரிகளில், 4 கல்லூரிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு முடிவு செய்திருக்கிறது. அந்த 4 இடங்களையும் நான் என்னுடைய துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில் அறிவித்திருக்கிறேன். உங்களுடைய கோரிக்கையும் பரிவாகப் பரிசீலிக்கப்பட்டு, உரிய வாய்ப்பு கிடைக்கும்போது கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

சுற்றுச்சுவர் கட்டுதல்

***511—முனைவர் T.R.B. ராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மூவாநல்லூரில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மூவாநல்லூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி அமைந்துள்ள நிலம் பள்ளிக் கல்வித் துறையின் பெயருக்கு மாற்றம் செய்யப்படாமல் உள்ளது. அது பள்ளிக் கல்வித் துறையின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டவுடன், ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் மூவாநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டு கால போராட்டத்திற்குப் பிறகு, கடந்த ஒரே வாரத்தில் மன்னார்குடிக்கு பல திட்டங்களை அள்ளி அளித்திருக்கும் எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மூலக் கேள்விக்கு மிகவும் positive-ஆக பதில் அளித்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*